*4*

# கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியைப் பற்றி விசுவாசிப்பது என்ன

*அந்நிய பாஷையை பேசுவது போலவும் அற்புத வரங்களை நடப்பிப்பதாகவும், காட்டிக் கொள்கிற ஏவுதலின் இயக்கம், பரிசுத்த ஆவியினால் புதிதாக்கப்படுவதாகவும், இந்த அற்புதங்களுக்கு பொறுப்பாளர்களும் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றனர். ஏவுதலின் இயக்கமாகத் தங்களைக் கருதிக் கொள்ளாத சில பாரம்பரிய சபைகளும் கூட அந்நிய பாஷை - பேசுவதையும் அற்புத சுகமளித்தலின் ஆராதனைகளையும் அங்கீகரிக்கின்றனர்.*

*பரிசுத்த ஆவியை அடையாளங் கண்டு கொண்டு, இந்த கருத்தின் கீழ் கிறிஸ்தவர்கள் விசுவாசிக்க வேண்டுவது என்ன? பரிசுத்த ஆவியை நாம் விசுவாசிக்கிறோம், ஆனால் அவரைக் குறித்து நாம் விசுவாசிப்பது என்ன? வேதாகமம் பரிசுத்த ஆவியின் இயல்பையும் கிரியையும் வெளிப்படுத்துகிறது.*

## பரிசுத்த ஆவியின் இயல்பு

*பரிசுத்த ஆவியானவர் யாராக அல்லது என்னவாக இருக்கிறார் மற்றும் தேவன் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறார்?*

**ஒரு நபர்**

பரிசுத்த ஆவியைக் குறித்த ஒரு உண்மையென்னவெனில் அவர் ஒரு பொருள் அல்ல, ஒரு நபர் - ஒரு “அவர்” ஒரு “அது” அல்ல. KJV யில் ரோமர் 8:16 சொல்லுகிறது, “ஆவி தாமே சாட்சி கொடுக்கிறது ...” என்றுள்ளது. மொழிபெயர்த்தவர்கள் “ஆவியானவர் தாமே என்பதற்குப் பதில்” “ஆவிதாமே” என்று (நடுநிலையில்) மொழிபெயர்த்து அதன் உச்சரிப்பை முன்குறிப்போடு ஒத்துப் போகச் செய்துள்ளனர், “ஆவியென” (ஆண்பாலுமின்றி பெண் பாலுமின்றி நடுநிலையில்) குறிப்பிட்டுள்ளனர். ஆனாலும், கிரேக்க மொழியில் ஒரு பெயர்ச்சொல்லில் ஒரு நபரை நடுநிலையாகவே அழைக்கப்படும். மற்ற மொழிபெயர்ப்புகளில் “ஆவியானவர் தாமே”[1] என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆவியானவர் சாட்சியிடுவது மட்டுமல்ல, அல்லது சான்றுபவர் மட்டுமல்ல (1 யோவான் 5:6 ஐக் காண்க) மற்ற வசனப்பகுதிகள் ஆவியானவர் ஒரு நபராக செயல்படுவதை தெளிவாக்குகின்றன. அவர் பேசுகிறார் (நடபடிகள் 13:2; 1 தீமோத்தேயு 4:1); அவர் ஆராய்கிறார் (1 கொரிந்தியர் 2:10); அவர் போதிக்கவும் செய்கிறார் (லூக்கா 12:12). அவருக்கென்று சித்தமுண்டு,

தெரிந்து கொண்டு செயல்படுகிறார் (1 கொரிந்தியர் 12:11). மேலும், அவர் துக்கப்படுத்தப்படுகிறார் (எபேசியர் 4:30). ஒரு நபரை மட்டுமே இப்படிப்பட்ட பதங்களில் பேச முடியும்.

**தேவத்துவத்தில் ஒருவர்**

தேவத்துவம் மூன்று நபர்களைக் கொண்டது: பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன். இந்த மூவரும் அடிக்கடி "திரியேகம்" என்று குறிப்பிடப்படுவதுண்டு. இந்த திரித்துவம் எனும் கருத்து ஒரே தேவன் மூன்று நபர்களை கொண்டுள்ளனர் - பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. திரித்துவம் எனும் வார்த்தையை திருமறை பயன்படுத்துவதில்லை ஆனால் அந்தக் கருத்தை போதிக்கிறது. ஒருவகையில் "தேவத்துவம்" எனும் பதம் "திரித்துவம்" என்பதற்குச் சமீபமான குறிப்பு எனலாம். நடபடிகள் 17:29 "தெய்வீக இயல்பை" பேசுகிறது.[2] "தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற நாம், தெய்வீக இயல்பு என்பது பொன் அல்லது வெள்ளி அல்லது கல், மனுஷருடைய யுக்தியினாலும் நினைவுகளாலும் உண்டாக்கப்பட்ட உருவங்கள் போன்றவைகளுக்கு ஒப்பாக இருப்பதாக நினைத்துவிடக்கூடாது."

கிறிஸ்தவர்கள் தேவத்துவம் அல்லது திரித்துவம் என்பதில் ஏன் விசுவாசம் கொண்டுள்ளனர்? ஏனெனில் புதிய ஏற்பாடு மூன்றைக்குறிப்பிட்டு அப்படியொரு புரிந்து கொள்ளுதலை எதிர்பார்க்கிறது. கீழ்வரும் வசனப் பகுதிகள் அப்படிப்பட்ட உதாரணங்களைக் கொண்டுள்ளன:

> "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து' " (மத்தேயு 28:18, 19).
>
> "நான் போராடுவது போல நீங்களும் என்னோடே கூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" (ரோமர் 15:30).
>
> "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு. கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும், எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே" (1 கொரிந்தியர் 12:4-6).
>
> "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமேன்" (2 கொரிந்தியர் 13:14).
>
> "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபேசியர் 4:4-6).

இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு, "வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார், அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, 'இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்' என்று உரைத்தது" (மத்தேயு 3:16, 17). இந்த நிகழ்ச்சியில் தேவத்துவத்தின் மூன்று நபர்களுமே பங்கேற்றனர்: (1) இயேசு ஞானஸ்நானம் பெற்றார் (2) பரிசுத்த ஆவி இறங்கி வந்தார் (3) பரலோகத்திலிருந்து தேவன் பேசினார். இந்த வசனப்பகுதிகளில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவிகளுக்கிடையேயான தொடர்பை மூவரையும் "தேவத்துவம்," அல்லது "திரித்துவம்" எனும் பதத்தில் விளக்கப்படுத்தி மட்டுமே விவரிக்க முடியும்.

தேவன் ஒருவராய் இருப்பதும் அதே வேளையில் மூவரில் ஒருவராய் இருப்பதும் எப்படி சாத்தியமாகும்? தேவத்துவத்தை விளக்கப்படுத்தும் பொருட்டு அநேக ஒத்திசைவுகளைப் பயன்படுத்தி துவக்கநிலை அளவில் விவரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு புருஷனும் அவனுடைய மனைவியும் ஒரு அர்த்தத்தில் ஒன்றாயிருந்தாலும், அவர்கள் தொடர்ந்து தனித்தனி நபர்களாகவே இருக்கின்றனர். மீண்டும், மற்றொரு ஒத்திசைவு உதாரணத்தில் ஒரு முட்டையை எடுத்துக் கொண்டால் அதின் ஓடு, வெள்ளைக்கரு மற்றும் மஞ்சள் கரு ஆகியன - தேவத்துவத்தில் மூவர் எப்படி தொடர்புடையவர்களாக இருக்க முடியும் என்று குழந்தைகளே புரிந்து கொள்ளத் துவங்கும். மேலும், திரித்துவம் என்பதை ஆசிரியர்கள் விளக்கப்படுத்தும் பொருட்டு மூன்று தீக்குச்சிகளைத் தனித்தனியே பற்ற வைத்து பிறகு மூன்றையும் ஒன்றாக வைத்து எப்படி மூன்றும் தனித்தனியாக இருந்தும் ஒன்றாக இணைக்கப்படவும் முடியும் என்று காட்ட முயற்சித்துள்ளனர். ஆயினும் ஒவ்வொரு ஒத்திசைவு உதாரணமும் நிறைவானதல்ல; இவைகளில் ஒன்று கூட தேவன் மூன்று நபர்களாகவும் ஒரு நபராகவும் எப்படியிருக்க முடியும் என்பதை முழுமையாய் விவரிக்கவில்லை. ஒருவேளை மனிதர்கள் முழுமையாய் புரிந்துகொள்ள முடியாத ஆவிக்குரிய உண்மைகளை "தேவத்துவம்" எனும் கருத்து "எப்படி" என்ற கேள்விக்கான பதிலாகக்கண்டு பிடிக்க இயலாது என்பதே. இருந்த போதிலும், அவைகளை திருமறை போதிப்பதால், கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கத்தான் வேண்டும்.[3]

பரிசுத்த ஆவியானவரும் தேவத்துவத்தில் ஒருவராக இருக்கிற படியால், தெய்வீகக் குணாதிசயம் அவருக்கும் உண்டு. தேவனுக்கு எப்படி மனித சரீரமோ மாமிசத்துக்குரிய குணாதிசயமோ இல்லாமல் ஆவியாயிருப்பது போலவே, பரிசுத்த ஆவியானவரும் இருக்கிறார், தேவன் சர்வவியாபியாய் இருப்பது போல, பரிசுத்த ஆவியானவரும் சர்வ வியாபியாய் இருக்கிறார்; அதாவது, அவரை ஒரே இடத்தில் இருத்திவைக்க முடியாது. இதன் விளைவாக, அவர் எல்லா கிறிஸ்தவர்களுக்குள்ளும் ஒரே நேரத்தில் வாசம் பண்ணுகிறார், வாசம் பண்ண முடியும்.

## பரிசுத்த ஆவியானவரின் பணி

பரிசுத்த ஆவியானவர் செய்வது என்ன? அப்போஸ்தலர்கள் காலத்தில் அவர் செய்ய வேண்டிய பணி இருந்தது, அவரது பணி தொடர்கிறது.

**அப்போஸ்தலர் காலத்தில்**

இயேசு அப்போஸ்தலருக்கு வாக்குத்தத்தம் பண்ணி, தாம் பூமியை விட்டுப்போனபிறகு, அவர்களை ஆறுதல்படுத்தவும் அவர்களுக்கு உதவவும் (யோவாவன் 14:16, 17; 16:7-11) அவர்களை வழிநடத்தவும் அவர்களுக்குப் போதிக்கவும் (யோவான் 14:26; 15:26, 27; 16:13-15) பரிசுத்த ஆவியை அவர்களுக்கு அனுப்புவதாகச் சொன்னார். யோவான் ஸ்நானகன் ஜனங்களுக்கு பரிசுத்த ஆவியினால் இயேசு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொல்லியிருந்தார் (மத்தேயு 3:11; மாற்கு 1:8). இயேசுவின் ஊழிய நாட்களில் (அவர் உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்) பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது அனுப்பப்படவில்லை (யோவான் 7:38, 39).

இயேசு பரமேறி செல்லுவதற்கு முன், அப்போஸ்தலர்கள் எங்கே எப்பொழுது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியைப் பெறக் காத்திருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார்: "... என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் காத்திருங்கள்" என்றார் (லூக்கா 24:48, 49). அப்போஸ்தலர் நடபடிகளில் இயேசு அந்த வாக்குத்தத்தத்தை விரிவாகப் பேசுவதைக்காண்கிறோம்.

> அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள், ஆகையால், "நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" (நடபடிகள் 1:4, 5).

> "... பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து; எருசலேமிலும், யூதேயாமுழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" (நடபடிகள் 1:8).

பிறகு நடபடிகள் 2ல், நாம் வாசிக்கிறோம்,

> பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (நடபடிகள் 2:1-4).

இந்த வசனப்பகுதிகள் எல்லாவற்றையும் ஒன்றாகத் தொகுத்துப் பார்த்தால், பின்வரும் கருத்துக்களைக் கற்றுக் கொள்கிறோம்:

1. *அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப்பெற வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தார்கள், அந்த வாக்குத்தத்தத்தை இயேசு பரமேறிச் செல்லும் வரை பெற்றுக்கொள்ள வில்லை.*
2. *அப்போஸ்தலர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கின காரியம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்துக்கு ஒப்பாயிருந்தது (பரிசுத்த ஆவியினால் முழுக்கப்பட்டார்கள்).*
3. *பெலனைத் தரிப்பிக்கும் வரை அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டியிருந்தது.*
4. *பரிசுத்த ஆவி வந்தபோது பெலன் வரவேண்டியதாயிருந்தது (மற்றும் பரிசுத்த ஆவி வந்தபோது, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானப்படுத்தப்படுவார்கள்).*
5. *பரிசுத்த ஆவியானவர் பெந்தெகோஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் மேல் வந்திறங்கினார்.*
6. *ஆகையால், பெந்தெகோஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே முழுக்கப்பட்டார்கள், அது அவர்களுக்கு கொடுக்கப்போவதாக செய்யப்பட்டிருந்த பரிசுத்த ஆவியோடு சம்பந்தப்பட்டது.*

*அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு (சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்டார்கள்; யோவான் 16:13), சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். அவர்களுடைய பிரசங்கத்தின் விளைவாக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள் (நடபடிகள் 2:35-41). பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட வசனத்தைப் பிரசங்கித்ததினால் ஜனங்கள் மனமாற்றப்பட்ட படியால், "மறுஜென்ம முழுக்குதலினாலும் பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும்" இரட்சிக்கப்பட்டார்கள் (தீத்து 3:5) மற்றும் "ஆவியினாலும் ஜலத்தினாலும்" மறுபடியும் பிறந்தார்கள் (யோவான் 3:5). இரட்சிக்கப்பட்டதன் விளைவாக, அவர்களுக்குள் வாசம்பண்ணும்படி பரிசுத்த ஆவியின் அளவைப் பெற்றார்கள் (நடபடிகள் 2:38; 5:32).*

*ஆவியானவரின் மூலமாக, அப்போஸ்தலர்கள் தாங்கள் பிரசங்கித்த வசனங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு அற்புதங்களை நடப்பித்தார்கள் (எபிரெயர் 2:3, 4). கூடுதலாக மற்ற கிறிஸ்தவர்கள் மேல் அவர்கள் கைகளை வைத்து, அதன் விளைவாக அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அற்புதங்களைச் செய்ய முடிந்தது (நடபடிகள் 8:14-24). இந்த அற்புத, வல்லமைகள், அல்லது ஆவிக்குரிய வரங்கள், ஆதிசபையிலே பரவலாக வழங்கப்பட்டன (காண்க 1 கொரிந்தியர் 12; 14; எபேசியர் 4:7-16).*

*பிறகு, பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்ட அப்போஸ்தலர்கள், தனிப்பட்ட அங்கத்தினர்களும் சபையும் தேவனைப் பிரியப்படுத்தத் தேவையான அறிவைப் பெறும்படியும் செயல்படும்படியும் போதிக்கப்பட்டார்கள். இதன் முடிவாக, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலால், அவர்களுடைய போதனைகளை பதிவேடுகளாக்கினார்கள். அப்போஸ்தலருடைய உபதேசங்களே மக்களுக்கு இந்த நடப்பு யுகத்தில் புதிய ஏற்பாடாக வந்துள்ளது.*

**தற்போதைய நடப்பு யுகத்தில்**

*முதல் நூற்றாண்டிலே பரிசுத்த ஆவியானவர் நடப்பித்த பெரும்பாலான பணிகளை, தொடர்ந்து இன்றும் நடப்பிக்கிறார்.*

*சபையின் துவக்க காலத்தில் பாவிகளை மனமாற்றியது* போலவே இன்றும் - "தேவனுடைய வசனத்தைப்" பிரசங்கிப்பதன் மூலம் - *மனமாற்றுகிறார்* (லூக்கா 8:11; யோவான் 3:3, 5; தீத்து 3:5; நடபடிகள் 2 யும் காண்க).

*பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து சபையை வழி நடத்தி,* கிறிஸ்தவர்களுக்கும் உள்ளூர் சபைகளுக்கும் போதிக்கவும் தேவனைப் பிரியப்படுத்த ஆதிசபையைப் போலவே முதல் நூற்றாண்டில் அவர் செய்ததுபோலவே அவர்கள் என்ன செய்ய வேண்டுமென கற்றுக் கொடுக்கவும் செயல்படுகிறார். இதை அவர், புதிய ஏற்பாட்டில் ஏவுதல் பெற்ற மனிதர்களால் எழுதப்பட்ட அறிவுறுத்துதல்கள் மூலம் செய்கிறார்.

*பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்குள்ளாக* இன்று வாசம்பண்ணுகிறார், பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர்களாகிற யாவருக்கும் அவர் கொடுக்கப்படுகிறார்:

> பேதுரு அவர்களை நோக்கி; "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப்[4] பெறுவீர்கள்" என்றார் (நடபடிகள் 2:38).

> "இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம், தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்" (நடபடிகள் 5:32).

> மேலும் நீங்கள் புத்திராயிருக்கிறபடியினால் "அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்!" (கலாத்தியர் 4:6).

கிறிஸ்தவர்களாகிய, நமக்கு பரிசுத்த ஆவியானவர், கொடுக்கப்பட்டுள்ளார், அவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார்.[5] நாம் பரிசுத்த ஆவியைப் "பெற்றவர்களும்" (எபிரெயர் 6:4) "ஆவியின் ஐக்கியத்தைப் பெற்றவர்களுமாவோம்" (பிலிப்பியர் 2:1; 2 கொரிந்தியர் 13:14), நாம் ஜெபிக்கிறபோது நமக்கு பெலன் கொடுத்து உதவி செய்கிறார்.[6]

ஆயினும், சபையின் இளம் பிராயக் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் செய்த சில காரியங்களை இன்று செய்வதில்லை என்று வேதம் சொல்லுகிறது. *ஆதி சபையின் நாட்களில் பரிசுத்த ஆவியானவர் ஏவி அருளினது போல இன்று மக்களுக்கு அருளப்படுவதில்லை.* திருமறை எழுத்தாளர்களை அவர் ஏவி எழுதச் செய்தார், மற்றும் இன்று அந்தத்திருமறையிலுள்ள வசனங்கள் நிறைவானவை. அவைகள் தேவனுடைய மனுஷனைத் தேறினவனாகவும் "எந்த நற்கிரியையுஞ்" செய்யத் தகுதியுள்ளவனாகவும் செய்கின்றன (2 தீமோத்தேயு 3:16, 17). ஆகையால், மேற்கொண்டு ஏவப்பட்ட வெளிப்பாடு தேவைப்படுவதும் இல்லை, கொடுக்கப்படுவதுமில்லை.

*"பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுதல் எனும்"* அளவில்

*சொல்லப்பட்டபடி மக்கள்மீது இன்று பரிசுத்த ஆவியானவர் வருவதில்லை.* அப்போஸ்தலர்களுக்கு ஒப்பாக, கொர்நெலியுவும், அவன் வீட்டாரும், பவுலும் இதே போன்ற அனுபவம் பெற்றதாக வாசிக்கிறோம் (நடபடிகள் 10; 11). அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் நோக்கம். கிறிஸ்தவர்கள் இன்றும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதினால் பயனடைகின்றனர், ஆகிலும் மக்கள் இன்று பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதில்லை.

*பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களை அற்புதங்களைச் செய்யும்படி இன்றைய நாட்களில் ஏவுவதில்லை:* தேவனுடைய வசனங்களை உறுதிப்படுத்த பரிசுத்த ஆவியின் வரங்கள் கொடுக்கப்பட்டன (எபிரெயர் 2:3, 4; மாற்கு 16:20; யோவான் 20:30, 31). அந்த வசனம் வெளிப்படுத்தப்பட்டு உறுதியும்படுத்தப்பட்டு விட்டது; ஆகையால் அந்த அற்புத வரங்கள் இனியும் தேவை இல்லை. உண்மையில், இப்படிப்பட்ட வரங்களெல்லாம் சபையின் (ஆரம்ப) குழந்தைப் பிராயத்திற்கு உரியது. "நிறைவானது" வந்த போது - அதாவது, தேவனுடைய வசனம் முழுமையாய் வெளிப்படுத்தப்பட்ட போது, அவைகள் கடந்து போகும் என்று பவுல் சொன்னார் (1 கொரிந்தியர் 13:8-10).

## முடிவுரை

பரிசுத்த ஆவியைக் குறித்து கிறிஸ்தவர்கள் "மிகவும் குறைவாகவோ" அல்லது "மிகவும் அதிகமாகவோ" விசுவாசிக்கக்கூடும். பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து மக்களை ஞானஸ்நானப்படுத்துவதோ, ஏவுவதோ, கிறிஸ்தவர்களை அற்புதங்களைச் செய்ய தூண்டவோ செயல்படுகிறார் என்று விசுவாசிப்போமானால், நாம் "அளவுக்கு அதிகமாக" விசுவாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரில்லை என்றோ, தேவத்துவத்தில் ஒருவரல்ல என்றோ அல்லது பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை முறையாய் வாழ்வதற்கு உதவிசெய்யும் பொருட்டு அவர்களுக்குள் ஆவியானவர் வாசம்பண்ணுகிறார் என்பதை மறுப்போமானால், பரிசுத்த ஆவியானவரை "மிகவும் குறைவாக" விசுவாசிக்கிறோம். கர்த்தருடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து திருமறை சொல்லுவதை விசுவாசிக்க வேண்டும் - கூடுதலாகவும் அல்ல, குறைவாகவுமல்ல. பரிசுத்த ஆவியானவர் யார் என்றும் நமக்கு இன்று அவர் என்ன செய்கிறார் என்றும் சொல்லுவதில் வேத வாக்கியங்கள் மாபெரும் ஆறுதலைக் கொடுக்கிறது.

---

குறிப்புகள்

[1]பரிசுத்த ஆவி ஒரு "ஆவேச ஆவியுமல்ல." பரிசுத்த ஆவியை "ஆவி" என மொழிபெயர்ப்பது சிறப்பானதாக இருந்த போதிலும், KJV மொழியாக்கம் செய்த போது (1611), அந்த நேரத்துக்கு நல்ல மொழிபெயர்ப்பாக இருந்திருக்கலாம், ஆகிலும் வெளிப்படையாகத் தெரியாததால் பரிசுத்த ஆவியைக் குறித்து சரியான விளக்கத்தைக் கொடுக்க வில்லை. எனவே இப்போதைய மொழிபெயர்ப்புகளில் "பரிசுத்த ஆவியை" "பரிசுத்த ஆவேச ஆவி" என்று மொழியாக்கம் செய்வதில்லை. [2]RSV மொழிபெயர்ப்பில் "தெய்வீகம்" (Deity) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [3]கிறிஸ்தவ விசுவாசத்தைக்

*கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்வோரில் சிலர் திரித்துவ உபதேசத்தை மறுதலிக்கின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தேவன் ஒரு நபராக மட்டுமே இருப்பதாக நம்பும் மக்கள். திருமறை உபதேசப்படி ஒரே தேவன் மூன்று நபர்களை கொண்ட அமைப்பாக வேத வசனம் போதிப்பதால் இந்தத் தலைப்பில் வேறே கருத்து எதுவுமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். [4]"பரிசுத்த ஆவியின் வரம்" என்பது பரிசுத்த ஆவியை வரமாகக் கொடுப்பது, ஒரு சைக்கிளை வரமாக (பரிசாக) பெற்றுக் கொள்பவர் "நான் இந்த சைக்கிளை [வெகுமதியாக] வரமாகப் பெற்றுக் கொண்டேன்" என்று சொல்வது போன்றது இது. [5]1 கொரிந்தியர் 3:16, 17; எபேசியர் 2:22; 2 தீமோத்தேயு 1:14; ரோமர் 5:5; 1 தெசலோனிக்கேயர் 4:8; எபேசியர் 4:13 ஆகியவைகளைக் காண்க. [6]எபேசியர் 2:18; 3:16; 6:18; யூதா 20; ரோமர் 8:26, 27யும் காண்க.*